[2006 ஆகஸ்ட் 1

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை எழுப்பியிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமைச்சராக இருந்தவர்கள். ஆனால், இந்த அளவிற்கு விவரம் தெரியாமல் இருப்பார் என்று நான் எண்ணவில்லை. காரணம், உச்ச நீதிமன்றத்திலே வழக்குத் தொடருமா என்று கேட்டிருக்கிறார். அவருடைய ஆட்சிக் காலத்திலேயே வழக்கு தொடரப்பட்டிருக்கிறது என்பதுகூட தெரியாமல் ஒரு முன்னாள் அமைச்சர், தொடரப்படுமா என்று கேள்வி கேட்கிறார், அமைச்சராக இருந்தவர். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஒரு அமைச்சராக இருந்திருக்கிறீர்கள். இந்த விவரம் உங்களுக்குத் தெரியவில்லை என்பதற்காக நான் வருத்தப்படுகிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள் முதலில். அமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். உட்காருங்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10–2–2006–லேயே உச்ச நீதிமன்றத்திலே அவருடைய ஆட்சிக் காலத்திலேயே வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. அந்த வழக்கை விரைவுபடுத்துவதற்கு இந்த அரசு மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுக்கும். அது மட்டுமல்ல, இன்றைக்கு காலையிலே கூட முதலமைச்சர் அவர்கள், நீங்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் ஆந்திராவிற்குச் செல்கிறபோது அங்கேயிருக்கிற முதலமைச்சரை சந்தித்துப் பேசிவிட்டு, வேண்டுமானால் நான்கூட வருகிறேன். அதற்குத் தேதியைப் பெற்றுவாருங்கள் என்று உத்தரவையும் கொடுத்திருக்கிற முதலமைச்சர்தான் டாக்டர் கலைஞர். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இதுகுறித்து இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிற காரணத்தினால், நிச்சயமாக உரிய நடவடிக்கைகளை உரிய நேரத்தில் வேகமாக எடுக்கும். மத்திய அரசாங்கத்திலே இருக்கிற மத்திய அமைச்சரும் இதற்கான அனுமதியை வழங்கவில்லை என்பதையும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனத்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2006

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு, அறிமுகம் செய்தல். 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனத்) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

2006 ஆகஸ்ட் 1]

*மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனத்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இச்சட்ட முன்வடிவை நாங்கள் அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடு) உங்களுடைய எதிர்ப்பு பதிவு செய்யப்படுகிறது. அறிமுக நிலையிலேயே உங்களுடைய எதிர்ப்பு பதிவு செய்யப்படுகிறது. உட்காருங்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, அதை record பண்ணிவிடலாம்.

4. விதி 110-ன்கீழ் அறிக்கை

தேர்தல் வாக்குறுதிகளை அரசு நிறைவேற்றி வருதல் – மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110–இன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றினை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.